**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070320236098

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 03.11.2022

Accepted: 20.12.2022

Published: 01.01.2023

Citation:
Murugesapandian, N. "Silapathikaaram and Ethics." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 3, 2023, pp. 1–9.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.6098

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Silapathikaaram and Ethics

**N. Murugesapandian**

*http://orcid.org/0000-0002-1831-7730*

**Abstract**

Ancient Tamil society gave importance to the concept of ethics. With the understanding that ethics had strongly permeated Tamils life at various levels, the relationship between Silapathikkaram epic and morality needs to be explored. Tamil society should approach Silapathikkaram with the understanding that it can get away with anything and not ignore basic moral guilt. Silambu's narrative can be interpreted as a symbol of how a society moves to the next stage through accumulated guilt.

**Key Words:** Silapathikkaram, Epic, Criticism, Ethics

**References**

1. Saravanan, S. 2008. *Silapthikkaram*. Chennai: Santhiya Pathipagam.

# சிலப்பதிகாரம் புனைந்திடும் அறம்

*ந.முருகேசபாண்டியன்*

***ஆய்வுச்சுருக்கம்***

*பண்டையத்தமிழ்ச் சமூகம், அறம் பற்றிய கருத்தியலுக்கு முக்கியத்துவம் அளித்தது. அறமானது பல்வேறு நிலைகளில் தமிழர் வாழ்க்கையில் அழுத்தமாக ஊடுருவியிருந்தது என்ற புரிதலுடன் சிலப்பதிகாரக் காப்பியத்திற்கும் அறத்திற்குமான உறவினைக் கண்டறிய வேண்டியுள்ளது. சிலப்பதிகாரம் காப்பியம் காட்டும் வாழ்க்கையின் பின்னர் பொதிந்திருக்கிற தமிழர் வாழ்வியல் அறம் இன்றைக்கும் பின்பற்ற வேண்டிய நெறியாக இருக்கிறது. அறம், என்றும் நிலைத்திருக்கும் என்பது ஒரு வகையில் நம்பிக்கை சார்ந்தது. தமிழ்ச் சமூகம் எதை வேண்டுமானாலும் உதறிவிடலாம், அடிப்படையான அறம்சார்ந்த குற்றவுணர்வைப் புறக்கணிக்கக்கூடாது என்ற புரிதலுடன் சிலப்பதிகாரத்தை அணுகிடவேண்டும். தொகுக்கப்பட்ட குற்றவுணர்வுகளின் வழியாகத்தான் ஒரு சமூகம் அடுத்த கட்டத்திற்கு நகர்கிறது என்பதற்குஅடையாளமாகத் தான் சிலம்பின் கதையாடலை விளங்கிக் கொள்ள முடியும்.*

***முக்கியச் சொற்கள்:*** *சிலப்பதிகாரம், காப்பியம், திறனாய்வு, அறம்*

பண்டையத் தமிழர்களின் வாழ்க்கையைப் பதிவாக்கியுள்ள சங்கப் பாடல்கள். பூமியில் மனித இருப்பு, முழுக்க இயற்கையுடன் தொடர்புடையது என்ற கருத்தை வலியுறுத்துகின்றன. சங்க காலத்திலே மக்கள் இனக்குழுத் தலைவனுடன் ஒத்திசைந்து எளிமையாக வாழ்ந்த நிலையில் மாற்றமேற்பட்டு, குறுநில மன்னர்கள் வலுவடைந்தனர். தீம்புனல் பாய்ந்திடும் மருத நிலத்தை ஆண்ட வேந்தர்களின் முடியாட்சி தொடங்கியது. தமிழ் மொழி அடையாளத்தை முன்னிறுத்தி நிலப்பரப்பினைக் கைப்பற்றும் முயற்சியினைப் புலவர்களின் பாடல்கள்துரிதப்படுத்தின. ஆட்சியதிகாரத்தினுக்குச் சார்பான நிலையில் புதிய விதிகள் உருவாக்கப்பட்டன; விலக்குகளும் ஏற்படுத்தப்பட்டன. சமூக ஏற்றத்தாழ்வான நிலையினை நியாயபடுத்தும் வகையில் முன்வைக்கப்பட்ட நெறிமுறைகள் முழுக்க அரசியலதிகாரப் பின்புலமுடையன. விதிகளும் விலக்குகளும் நடைமுறைப்படுத்தப்பட்ட சூழலில், அறம் என்ற கருத்தியல் முன்வைக்கப்பட்டது. அறம் என்பது மேன்மையாது, புனிதமானது, காலந்தோறும் மாறாதது போன்ற புனைவுகளுக்கப் பால் அறத்தைக் கண்டறிந்திட வேண்டியுள்ளது. கடவுள் பற்றிய கட்டுக்கதைகள், புராணங்கள், அதியற்புதச் செயல்கள் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளிக்காத பண்டையத் தமிழ்ச் சமூகம், அறம் பற்றிய கருத்தியலுக்கு முக்கியத்துவம் அளித்தது. அறமானது பல்வேறு நிலைகளில் பண்டைத் தமிழர் வாழ்க்கையில் அழுத்தமாக ஊடுருவியிருந்தது என்ற புரிதலுடன் சிலப்பதிகாரக் காப்பியத்திற்கும் அறத்திற்குமான உறவினைக் கண்டறிய வேண்டியுள்ளது. வணிகக் குடும்பப் பின்புலமுடைய கோவலன் - கண்ணகியை முன்வைத்து இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தின் கதையாடல், 1,800 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றைய கால கட்டத்திலும் பேசுபொருளாக இருக்கிறது. சிலப்பதிகாரம் காப்பியம் காட்டும் வாழ்க்கையின் பின்னர் பொதிந்திருக்கிற தமிழர் வாழ்வியல் அறம் இன்றைக்கும் பின்பற்ற வேண்டிய நெறியாக இருப்பது கவனத்திற்குரியது.

அறம் வெல்லும் மறம் வீழும் என்பது வெறுமனே நம்பிக்கை அடிப்படையிலானது. விதியின் விளையாட்டு, விதியின் கைப்பாவை, விதியை வெல்ல முடியுமா? தலைவிதியை மாற்ற முடியுமா? போன்ற சொல்லாடல்கள்மூலம் சமயங்கள், நிலவும் சமூகச் சூழல் குறித்து விமர்சனமற்ற பார்வையை வலியுறுத்துகின்றன.. வைதிக சமயம் பிரம்மம் என்ற கருத்தியலுடன் வருணாசிரமக் கோட்பாட்டினை இன்றளவும் வலியுறுத்துகின்றது. அறமானது அதிகாரத்துடன் ஆள்கின்றவர்களின் நலனைக் காத்திட முயலுகிறது. இன்னொருபுறம். சமூக அறம், தனிமனித அறம் என்ற நிலையில் அறத் திற்கும் மறத்திற்கும் இடையிலான முரண் தொடர்கிறது.

அறம், மனித இருப்பினுக்கு அடிப்படையானது என்ற பொதுப்புத்தி நிலவுகிற தமிழர் வரலாற்றில் உண்மையிலே அறம் இருக்கிறதா? யோசிக்க வேண்டியுள்ளது. சங்க இலக்கியப் படைப்புகள் முதலாகத் தமிழிலக்கியப் பரப்பில் பெரிதும் வலியுறுத்தப்படும் சொல் அறம். மக்கள் அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைப் படைப்பாளர்கள்தான் காலந்தோறும் படைப்புகளின் வழியாக அடுத்த தலைமுறைக்குக் கடத்துகின்றனர் பூமியில் மனித இருப்பு, காலங்காலமாக எதிர்கொள்கிற சமூகரீதியிலான பிரச்சினைகளையும், தனிமனிதச் சிக்கல்களையும் கடந்து சென்றிட அறத்தை முன்னிறுத்துவது வழக்கமாக உள்ளது. அறம் என்ற சொல்லின் பின்னர் பொதிந்திருக்கிற நுண்ணரசியல் வலுவானது. மதங்கள் வலியுறுத்துகிற ஐம்புலன்களை அடக்கியொடுக்குதல் என்ற நடத்தையானது அறமெனப் போற்றப்பட்ட போது உடைமைச் சமூகம் வலுவடைந்த சூழலில், அடக்கியொடுக்கப்பட்ட அடிமை உடல்களை உருவாக்குதல் அடங்கியுள்ளது. அறம் என்பது விளிம்புநிலையினருக்குச் சார்பானது என்ற கருத்தியல் ஒருவகையில் நம்பிக்கை சார்ந்தது. தீமையை எதிர்த்திடும் ஆற்றல் அறத்தின் வயப்பட்டது என்ற நம்பிக்கைக் காரணமாகத்தான் ஒடுக்கப்பட்டோர் வரலாறு முழுக்க அடங்கியொடுங்கி இருக்கின்றனர்.

தமிழ்ச் சமூகம் என்ற அமைப்பினை உருவாக்கியதில், தமிழ் மொழியின் பங்கு முக்கியமானது. மனிதனைச் சமூகமயமாக்கும் செயலைச் செய்கின்ற மொழியானது, மனிதர்கள் ஒருங்கிணைந்து வாழ்வதற்குரிய தொடர்பினைக் கட்டியமைக்கின்றது. மொழி என்னும் கருவி, மனித நினைவுகளின் வழியே கடந்த காலம் என்ற வரலாற்றைச் சாத்தியப்படுத்தியுள்ளது. அது நல்லது-கெட்டது, அன்பு-வெறுப்பு எனப் பல்வேறு எதிரிணைகள்மூலம் மனித இருப்பினை உருவாக்கும் உயிரோட்டமான கருவியாக விளங்குகிறது. குழுவினராகச் சார்ந்து வாழும் இயல்புடைய மனிதர்களின் உறவுகளுக்கு அடிப்படையாகத் தகவல் தொடர்புக் கருவியான மொழி விளங்குகிறது. மொழி அரசியலுடன் நெருங்கிய தொடர்புடைய அறம், காலந்தோறும் சமூகத்தை நெறிப்படுத்திட அடிப்படையானதாகும். தமிழர் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய அறம், என்றும் நிலைத்திருக்கும் என்பது ஒருவகையில் நம்பிக்கை சார்ந்தது. தமிழ்ச் சமூகம் எதை வேண்டுமானாலும் உதறிவிடலாம், அடிப்படையான அறம் சார்ந்த குற்றவுணர்வைப் புறக்கணிக்கக்கூடாது என்ற புரிதலுடன் சிலப்பதிகாரத்தை அணுகிடவேண்டும். தொகுக்கப்பட்ட குற்றவுணர்வுகளின் வழியாகத்தான் ஒரு சமூகம் அடுத்த கட்டத்திற்கு நகர்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் சிலம்பின் கதையாடலை விளங்கிக்கொள்ள முடியும்.

சிலப்பதிகாரத்தைப் புனைகதை என்ற நிலையில் இருந்து விலகி, கண்ணகி என்ற

பெண்ணின் வாழ்க்கையில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்கள் என்று அணுகுவது, கவனத்திற்குரியது. சிலப்பதிகாரம் விவரித்து உள்ள கதையானது முன்னர் எப்பொழுதோ தமிழக நிலவெளியில் நடைபெற்றது என்ற நம்பிக்கை, இன்றளவும் தமிழர்களிடம் நிலவுவதையும் கணக்கில்கொள்ள வேண்டும். கண்ணகி என்ற தொன்மம், தமிழக நாட்டார் பாடல்களில் இடம்பெற்றிருந்தாலும், கண்ணகியைப் பத்தினிக் கடவுள் என்று வழிபடுவது, தமிழகத்தில் இல்லை.

சிலப்பதிகாரம் காப்பியத்தின் பதிகத்தில் இடம்பெற்றுள்ள வரிகள்மூலம், இளங்கோ காப்பியம் புனைந்ததின் நோக்கத்தை அறியமுடிகிறது. ‘நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்’ என்று இளங்கோ சொல்வதாகப் பதிகத்தில் இடம் பெற்றிருந்தாலும், சிலம்பு எழுதப்பட்டுப் பல்லாண்டுகள் கடந்த பின்னர் பதிகம் வேறு ஒருவரால் எழுதப்பட்டது என்ற கருத்து, தமிழறிஞர்களிடம் நிலவுகிறது.

> **அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்**
> **உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**
> **ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்**
> **சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்**
> **சிலப்பதி காரம் என்னும் பெயரால்**
> **நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்**

என ஒற்றைமுலைச்சி பற்றிய சங்கப் பாடலில் இடம்பெற்றுள்ள பதிவும் கண்ணகி பற்றி மக்களிடம் வழக்கிலிருந்த நாட்டார் கதைகளும்தான் சிலம்பு எழுது வதற்கான அடிப்படையாகும். அன்றைய சமூகத்தில் கண்ணகி என்ற பெண்ணுக்குப் பாண்டிய மன்னனின் கொடூரமான செயலினால் ஏற்பட்ட துயரத்தை முன்னிறுத்தி, அரசியல் பிழைத்தால் அறம் கூற்றாகும் என்று பதிகத்தில் சொல்லப்பட்டிருப்பது அடிப்படையான அறமாகும். சிலப்பதிகாரப் பிரதி, வாசிப்பில் உருவாக்கிய அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று என்ற கருத்தியல் தனித்துவமானது. கண்ணகியின் துயரக் கதையாடலுடன் அரசியலும் அறமும் பெறுமிடம் முக்கியமானவை. அரசியலில் ஆளுவோர் அடிப்படையான அறத்தை மீறினால் நிச்சயம் பேரழிவுதான் என்று அறத்தின் வலிமையைச் சிலம்பு முன்வைத்துள்ளது. தனிமனித அறம், சமூக அறம் என்ற இருவேறு நிலைகளில் சிலம்பு முன்வைத்திடும் அறத்தைக் கண்டறிந்திட வேண்டியுள்ளது.

கண்ணகி, கோவலன் வாழ்க்கையில் இடம்பெறும் அறச் செயல்கள், பாண்டிய மன்னனின் அறமற்ற செயல்கள், இளங்கோ முன்வைக்கும் அறங்கள் என்று மூன்று வகையாக அறம் பற்றிய சொல்லாடல்கள் சிலம்புப் பிரதியில் பதிவாகியுள்ளன. கண்ணகி, திருமண வாழ்க்கையில் கோவலன் பிரிந்தநிலையில் வருந்தினாலும் இயல்பாக வாழ்கிறாள். அவள் மீண்டும் கோவலனுடன் சேர்ந்தபோது தனது முந்தைய வாழ்க்கை பற்றிச் சொல்கிறாள். கணவன் கோவலன் பிரிந்த காரணத்தினால் அவள் இழந்தவை குறித்துச் சொல்கிற வரிகள் அறத்துடன் நெருங்கிய தொடர்புடையன.

> **அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
> **துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
> **விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை**
> **(சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, வரிகள்:71-73)**

கோவலனைப் பிரிந்து வாழ்ந்தபோது. அறம் செய்வோர்க்கு உதவுதல், அந்தண மரபினரைப் போற்றுதல், துறவிகளை எதிர்கொண்டு அவர்களுக்கு வேண்டுவன செய்தல், விருந்தினரைப் பாதுகாத்தல் ஆகிய நான்கு அறங்களைத் தன்னால் செய்ய இயலவில்லை என்று கண்ணகி வருந்துகிறாள். கணவனைப் பிரிந்து வாழ்கிற கண்ணகியால்

அறங்களைச் செய்ய இயலாத நிலைக்குப் பொருளாதாரம் மட்டும் காரணமல்ல. வேறு சமூகக் காரணம் இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. அறவோர், துறவியருடன் அந்தணர் என்று பார்ப்பனரையும் ஒன்றாகக் கருதும் நிலை, வைதிக சமயத்தின் ஆதிக்கத்தைக் காட்டுகிறது.

அறம் பற்றிய கண்ணகியின் புரிதல், அவளுடைய சமூக அறம் சார்ந்தது. கோவலன் கொன்ற பாண்டிய மன்னனை எதிர்கொண்டு வழக்காடி, கோவலன் குற்றமற்றவன் என்று நிறுவி, மன்னன் இறப்பதற்குக் காரணமான கண்ணகி, அறம் அல்லாத செயல்களைச் செய்தால், அந்த அறமே கூற்றாகிவிடும் என்கிறாள்.

**அல்லவை செய்தார்க்கு அறம்கூற்ற மாம் என்னும்**

**பல்லவையோர் சொல்லும் பழுதன்றே - பொல்லா**
**வடுவினையே செய்த வயவேந்தன் தேவி**
**கடுவினையேன் செய்வதூஉம் காண்**
***(சிலப்பதிகாரம்,***
***வழக்குரை காதை: வெண்பா எண் : 1)***

செய்யக்கூடாத வினைகளைச் செய்தவர்களை அறம் கூற்றாக நின்று தண்டிக்கும் என்று சான்றோர் கூறிய வாக்கு வாய்மையானது. பொல்லாத பழிச் செயலைச் செய்த வெற்றி வேந்தனின் தேவியே! தீவினைக்கு ஆளான நான் இனிச் செய்கின்ற செயலையும் காண்பாயாக என்று கண்ணகி தான் அடுத்துச் செய்யவிருந்த செயலைப் பற்றிக் குறிப்பிடுகிறாள். குடும்பப் பெண்ணாகக் கணவனின் தவறுகளைப் பொறுத்துக் கொண்டு, அடங்கியொடுங்கி இருந்த கண்ணகியின் அறம் பற்றிய கருத்தியல் சமூக அறம் சார்ந்தது. ஒருவகையில் கண்ணகியின் அறச்சீற்றம் தான் காப்பியக் கதையாடலைச் சமூக விமர்சனத்திற்குள்ளாக்குகிறது.

கண்ணகி, இடது முலையைத் திருகி எறிந்து மதுரை நகரைத் தீயிலிட்டு அழித்திட முயலுகிற போது தீத்திறத்தினரை அழித்திடுக என்று ஏவுகிறாள். பார்ப்பனர், அறவோர், பசு, பத்தினிப் பெண்கள், மூத்தோர், குழந்தைகள் ஆகியோருக்குத் தீயிலிலிருந்து விலக்கு அளிக்கிறாள். கண்ணகி சொல்கிற பட்டியலில் முதல் இடத்தில் பார்ப்பனர் இடம் பெற்றிருப்பது தற்செயலானது அல்ல. வைதிக சமயத்தின் அறமான பார்ப்பனரைக் கொல்லுதல் கூடாது என்ற அறத்தையே கண்ணகியின் மூலம் இளங்கோ வலியுறுத்தியுள்ளார். மனு தரும சாத்திரத்தின் குரல் சிலம்பில் ஒலிக்கிறது.

**பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்,**
**மூத்தோர், குழவி, எனும் இவரைக் கைவிட்டு,**
**தீத் திறத்தார் பக்கமே சேர்கீ என்று, காய்த்திய**
**பொன்-தொடி ஏவ, புகை அழல் மண்டிற்றே-**
**நல் தேரான் கூடல் நகர்.**
***(சிலப்பதிகாரம், வஞ்சின மாலை.***
***வரிகள்: 53-57)***

கோவலன், வான் பொருட் குன்றம் போன்ற செல்வத்தை மாதவியுடன் சேர்ந்த வாழ்க்கையில் தொலைத்துவிட்டு, மீண்டும் கண்ணகியைத் தேடி வருகிறான். கண்ணகியின் காற் சிலம்பை விற்று, வணிகம் செய்யலாம் என மதுரை நகருக்குச் செல்லும்போது அவளையும் உடன் அழைத்துச் செல்கிறான். வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திடாத கண்ணகி கால்நடையாக நெடிய வழியில் செல்கிறாள். குடும்ப நிறுவனத்தில் கோவலனுடைய செயல்கள் அறத்திற்குப் புறம்பானவை. ஆனால் கோவலன் அறவுணர்வு மிக்கவன் என்று சிலம்பு கட்டமைத்திட முயலுகிறது. கோவலன் மதுரை நகரில் அநியாயமாகக் கொல்லப்பட போகிறான் என்ற நிலையில் அவனைப்பற்றி விரிந்திடும் புதிய சொல்லாடல், அறத்துடன் தொடர்புடையது. மாடல மறையோன் கோவலனைச் சந்தித்த

போது, அவனைக் கருணை மறவன், செல்லாச் செல்வன், இல்லோர் செம்மல் என்று போற்றுகின்றான். மதம்கொண்ட யானையிடம் சிக்கிய அந்தணனை விடுவித்து அந்தணனுக்கும் யானைக்கும் கருணை அளித்தவன் என்பதால் கோவலன் கருணை மறவன் ஆனான். குழந்தையைப் பாம்பிடம் இருந்துக் காத்த கீரியைக் கொன்ற பார்ப்பனியின் பாவம் போக்கிட பொருள் கொடுத்து உதவியதால் கோவலன் செல்லாச் செல்வன் எனப்பட்டான். பொய்ச் சாட்சி சொன்னவனுக்காகத் தன்னுயிர் கொடுக்க முற்பட்டதால் கோவலனுக்கு இல்லோர் செம்மல் என்ற பெயர் ஏற்பட்டது. சமூக வாழ்க்கையில் அறத்துடன் வாழ்ந்த கோவலன், அக வாழ்வில் கண்ணகிக்குச் செய்த அறமற்ற செயலுக்குக் காரணம் வெறுமனே ஊழ்வினை மட்டுமா?

சமூக அறத்தில் பாண்டிய நாட்டு மன்னன் முக்கிய இடம் பெறுகிறான். மதுரை நகரில் வீற்றிருந்து அரசாண்ட பாண்டிய மன்னன் அறநெறி தவறாமல் ஆட்சி செய்தான். அவன், பாண்டிய நாட்டுக் குடிமக்களின் வாழ்க்கைமீது அக்கறையுடன் நேர்மையுடன் ஆட்சி புரிந்தான் என்பது சிலப்பதிகாரம் காப்பியத்தில் பல்வேறு இடங்களில் சுட்டப்பட்டுள்ளது. கட்டுரைக் காதையில் மதுராபுரி என்னும் குலதெய்வம், பாண்டிய மன்னனின் செங்கோலாட்சியைக் கண்ணகிக்கு எடுத்துக்கூறும் செய்தியில் பாண்டியனின் அறநெறி, பருண்மையாக வெளிப்பட்டுள்ளது கோவலன் கொல்லப்பட்ட துயரத்தினால் கவலையுடன் இருக்கின்ற கண்ணகியை நோக்கி மதுராபுரி தெய்வம் சொல்கிற வரிகள் முக்கியமானவை.

***மறைநா ஓசை யல்லாது யாவதும்***
***மணிநா வோசை கேட்டது மிலனே***
***அடி தொழு திறைஞ்சா மன்ன ரல்லது***
***குடிபழி தூற்றும் கோலனும் அல்லன்***
***(சிலப்பதிகாரம், கட்டுரை காதை. வரிகள்:.30-34).***

மதுராபுரி தெய்வம், பாண்டிய மன்னன் அந்தணர் வேதம் ஓதுகின்ற மறை ஓசை அல்லாமல் ஒருபோதும் ஆராய்ச்சி மணியின் நா அசைவினால் உண்டாகுகிற ஓசையைக் கேட்டறியாதவன், பகை மன்னர்கள் பொறாமையால் பழி தூற்றுவார்களே அன்றி தன் குடிமக்கள் பழி தூற்றும் கொடுங்கோலன் அல்லன் என்று கண்ணகியிடம் சொல்கிறது. அறநெறி தவறாத மன்னன் பாண்டியன் என்பதற்கு அடையாளமாகப் பார்ப்பனர்களின் வேதம் ஓதும் ஓசை சொல்லப்பட்டுள்ளது. வைதிக சமயத்தின் செல்வாக்குக் காரணமாகப் பார்ப்பனர்கள் வேதம் ஓதுதல் அறமாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அறத்துக்கும் வைதிக சநாதனக் கருத்தியலுக்கும் இடையிலான உறவு, காப்பியத்தில் தொடர்ந்து வெளிப்பட்டுள்ளது.

பாண்டியன் எப்பொழுதும் அறநெறியில் செயல்பட்ட செய்தியைப் பற்றி மதுராபுரி தெய்வம் சொல்கிற கதை, அறத்துடன் தொடர்புடையதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. கீரந்தை என்னும் அந்தணன் பொருள் தேட தனது மனைவியை வீட்டில்விட்டு, வெளியூர் சென்றுவிட்டான். பாண்டிய மன்னன் இரவில் நகர்வலம் செல்லும்போது கீரந்தை வீட்டில் சத்தம் கேட்கவும் மன்னன் கதவைத் தட்டிவிட்டான். அப்போது அச்சம் கொண்ட அந்தணன் மனைவி, ‘குடிமக்களுக்கு அரசனுடைய செங்கோலாட்சி காவலாக அமையும் அல்லாது அதனைவிட காவல் வேறு எதுவும் இல்லை’ என்று கூறி என்னை இல்லத்தில்விட்டு சென்றீர். இப்பொழுது அந்த அரச வேலி காவலாக இல்லையோ? எனக் கூறினாள். இதனைக் கேட்டு வருத்தமடைந்த பாண்டிய மன்னன் தனது கையினை உடை வாளால் வெட்டிக்கொண்டான். இத்தகைய அறநெறியை உடையவன் பாண்டிய மன்னன் என்கிறது கதை. பாண்டிய மன்னன் தவறான புரிதலால்

செய்த சிறிய தவறுக்காகத் தன்னுடைய கையை வெட்டிய கதை, பார்ப்பனரின் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. வைதிக சநாதனம் எப்பொழுதும் பார்ப்பனரின் நலன்களையே அறமாக முன்வைத்துள்ளதை அறிய முடிகிறது.

***நெஞ்சம் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று***
***வச்சிரத் தடக்கை அமரர் கோமான்***
***உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை***
***குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து***
***இறைக்குடிப் பிறந்தோர்க் கழுக்கம் இன்மை***
***(சிலப்பதிகாரம், கட்டுரைக் காதை, வரிகள்:49-53)***

கோவலன் ஏன் கொலை செய்யப்பட்டான்? அறநெறி தவறாத மன்னரால், கோவலன் கொல்லப்படுவதற்கு காரணம் என்ன? போன்ற கேள்விகளுக்கு அது ஊழ்வினையின் விளைவு என்று காப்பியக் கதையாடல் முன்வைக்கிறது

***மண்ணக மடந்தை வான்துயர் கூறக்***
***காவலன் செங்கோல் வளைஇய***
***வீழ்ந்தனன் கோவலன் பண்டை***
***ஊழ்வினை உருத்தென்***
***(சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை, வரிகள்:215-218)***

***நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே***
***கண்ணகி தன்கேள்வன் காரணத்தால் - மண்ணில்***
***வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை***
***விளைவாகி வந்த வினை***
***(சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை, வெண்பா)***

கோவலனின் முன்வினையானது முதிர்ந்துவந்து ஊட்டுதலால் அவன் வெட்டுண்டு தரையில் வீழ்ந்தான். முன்னர் செய்த தீவினையால் நிலவுலகில் ஒரு காலத்தும் வளையாத பாண்டியனின் செங்கோல், கண்ணகியின் கணவனான கோவலனைக் காரணமாகக் கொண்டு வளைந்தது என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஊழ்வினை தான் மன்னன் அறம் தவறியதற்குக் காரணம் என்ற கதையாடல் அறத்துக்கும் ஊழ்வினைக்கும் இடையிலான தொடர்பைச் சுட்டுகிறது.

பாண்டிய மன்னன் ஏன் இறக்க வேண்டும்? பொன் செய் கொல்லன் சொல் கேட்டதனால் ஏற்பட்ட தவறு என்று அறிந்த பின்னர் பொற்கொல்லனைப் பிடித்துத் தண்டிக்காமல் பாண்டிய மன்னன் ஏன் இறந்தான்? போன்ற கேள்விகள் தோன்றுகின்றன. பாண்டிய மன்னர்கள் அறநெறியில் ஆட்சி செய்து புகழுடன் இருந்துள்ள மரபு சிதலமடைந்தது தான் பாண்டிய மன்னனின் இறப்புக்குக் காரணம். பாண்டிய நாட்டை ஆள்கிற மன்னன் அரசியல் நெறி பிறழாமல் இருக்கும்போதுதான் இயற்கை செழிப்படையும்; உயிரினங்கள் அமைதியாக வாழும்; அமைதி கொழிக்கும்; அமைதி தவழும் மண்ணில் தான் மக்கள் அல்லல் இன்றி வாழ்வர் என்று அறம் பற்றிய கருத்தியலைச் சிலப்பதிகாரம் மன்னர்க்குரியதாகக் காட்டுகிறது.

அறம் என்பது மானுடத்தின் நலனை நோக்கமாகக்கொண்டது. இது சரியான செயல், இதனால் அனைவரும் பயனடைவர். எனவே சரியானவற்றைச் செய்ய நான் கடமைப்பட்டவன் என்ற அறிவோடு செயற்படும் நிலை மனச்சான்று நிலையாகும். அறவுணர்வு வளர்ச்சியின் இறுதி நிலையை மன்னர்களுக்குரியதாகச் சிலப்பதிகாரம் முன்வைக்கிறது. பாண்டிய மன்னன் அறம் பிழையாமல் நாட்டு மக்களைக் காத்து வருகிறான் என்பதை அடைக்கலக் காதையில் கோவலன் கூற்றின்மூலம் அறியமுடிகிறது

***நிலந்தரு திருவின் நிழல்வாய் நேமி***
***கடம்பூண்டு உருட்டும் கௌரியர் பெருஞ்சீர்க்***
***கோலின் செம்மையும் குடையின் தண்மையும்***

**வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
பதியெடு அறியாப் பண்புமேம் பட்ட
மதுரை மூதூர் மாநகர் கண்டாங்கு
(சிலப்பதிகாரம், அடைக்கலக் காதை.
வரிகள்:1-6)**

பாண்டிய நாட்டுக்குப் பல்வேறு செல்வங்களைத் தருவதும் மக்களுக்கு நிழலாக விளங்குவதும் ஆகிய அருளாட்சி முறையைக் கடமையாகக்கொண்டு அற நெறியில் இருந்து வழுவாது ஆள்பவர் பாண்டியர். அவருடைய சிறப்புமிக்க செங்கோலாட்சியும் குடையின் தன்மையும் வேலின் வெற்றியும் உலகெங்கும் புகழுடன் விளங்கும் தன்மையுடையன. பாண்டியரின் தலைநகரமான மதுரையோ எனின் அங்குள்ள மக்கள் பிழைப்புக்காக வேறு ஊர் செல்லுதலை அறியாதவாறு செல்வத்தாலும் பிறவற்றாலும் மேம்பட்ட சிறப்புடையது

வைதிக சமயத்தின் செல்வாக்குக் கருத்தியல் ரீதியில் தமிழ்ச் சமூகத்தில் ஊடுருவியிருந்தது என அறிந்திட சிலம்பில் பார்ப்பனர் பெறுகிற தண்டனைகள் பற்றிய விவரிப்புகள் முக்கியமானவை. அவை, மனு தரும சாத்திரம் வலியுறுத்துகிற அறங்களைப் பின்பற்றியவை. மனு விவரிக்கிற தண்டனைகளையும் நியாயங்களையும் போலவே சிலம்பின் கதையாடலும் இருக்கிறது. இளங்கோ, பதினொரு குற்றங்களைப் பட்டியலிட்டு அவற்றிற்கான தண்டனைகளையும் தொகுத்து விளக்கியதன்மூலம் சமூகப் பண்பாட்டு மரபை மீட்டெடுப்பதும், அதனை நிறுவுவதும் அரசு நிர்வாகம் உள்ளிட்ட சமூக நெறியுடன்கூடிய விழுமியங்களைக் கட்டமைப்பதும் அவருடைய நோக்கமாக இருக்கிறது. குற்றங்களுக்குரியவர்களாகப் பார்ப்பனர் யாருமில்லை; சிலவேளைகளில் குற்றம் நடந்ததாகப் பார்ப்பனர் அஞ்சினாலும், யாருக்கும் தண்டனை இல்லை. செய்த தவறுக்குப் பிராயச்சித்தம்தான் உண்டு. வார்த்திகன் என்னும் பார்ப்பான் பொய்யாய்க் குற்றம் சாட்டப்பட்டதினால், பெருங்கொடைகள் பெறுகிறான். பார்ப்பனார் பாதிக்கப்படும் போது அரச வர்க்கத்தினரும், வணிக வர்க்கத்தினரும் ஓடிவந்து உதவி செய்தல் என்பது வருணாசிரம போதனைகளின் வழிகாட்டல். அரசர், வணிகர் உள்ளிட்ட பிற சாதியினருக்குக் குற்றங்களுக்கேற்பத் தண்டனைகள் உண்டு. தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இன்னும் கடுமையான தண்டனைகள். ஏன் இப்படி என்ற கேள்வி தோன்றுகிறது. மனு வருணக் கோட்பாடு அடிப்படையில் வகுத்துள்ள விதிகள் ஒருவகையில் அறம் பற்றிய புரிதலின் இன்னொரு வெளிப்பாடு. இளங்கோவின் சிலம்பு, மனுவை முன்மொழிந்து, மனுவின் போதனைகளின் வழியாக அறத்தை முன்வைத்துள்ளது. பார்ப்பனரான வார்த்திகன் - கார்த்திகை கதையைச் சீற்றத்துடன் இருக்கிற கண்ணகியிடம் ஏன் சொல்ல வேண்டும்? கோவலன் கொல்லப்பட்டதற்காகக் கண்ணகி பழிவாங்கியதன் விளைவுதான் பாண்டியனின் மரணம். பொற்கொல்லன் செய்த குற்றத்திற்காகப் பாண்டிய மன்னன் பழி சுமக்கிறான். அந்தப் பாண்டிய மன்னனின் அரசியல் வாரிசு வெற்றிவேற் செழியன், ஆயிரம் பொற்கொல்லர்களைக் கூட்டமாகக் கொலை செய்த அரச பயங்கரவாதத்தைப் பத்தினிக் கோட்ட விழா முடிந்து, பல நாட்கள் கழிந்த பின்னர் துணுக்குப் போல இளங்கோ சொல்வதில் நுண்ணரசியல் பொதிந்திருக்கிறது. யாரோ ஒரு பொற்கொல்லன் செய்த தவறுக்காக ஆயிரம் பொற்கொல்லர்களைக் கொலை செய்த செயல் என்னவகையான அறம்? சிலம்புப் பனுவல் பொற்கொல்லர்களின் கூட்டக்கொலையான அறமற்ற செயல் குறித்துக் கள்ள மௌனம் சாதிக்கிறது.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் இறுதியில் வரந்தரு காதையில் இளங்கோ குறிப்பிடுகின்ற இருபத்திரண்டு அறங்கள் முக்கியமானவை.

*கண்ணகி கதையாடல் மூலம் வெளிப்பட்டுள்ள அறங்கள் தனித்துவமானவை என்றாலும் இளங்கோ சிலம்பை வாசிக்கின்றவர்களுக்காகத் தொகுத்துத் தனியாகச் சொல்லியுள்ள அறங்கள் கவனத்திற்குரியன. தனிமனித ரீதியில் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டியனவாகக் குறிப்பிடப்பட்டுள்ள அறங்களில் பல இன்றைக்கும் பொருந்துகின்றன. சிலம்புப் பனுவல் முன்வைக்கிற அறங்கள் தனிமனிதனையும் சமூகத்தையும் நெறிப்படுத்திடும் வல்லமை மிக்கன. அவை:*

***பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்***
***தெய்வம் தெளிமின்***
***பொய்யுரை அஞ்சுமின்***
***புறஞ்சொல் போற்றுமின்***
***ஊண் உண் துறமின்***
***உயிர்க்கொலை நீங்குமின்***
***தானம் செய்மின்.***
***தவம் பல தாங்குமின்***
***செய்ந்நன்றி கொல்லன்மின்***
***தீ நட்பு இகழ்மின்***
***பொய்க்கரி போகன்மின்***
***பொருள்மொழி நீங்கன்மின்***
***பிறர் மனை அஞ்சுமின்.***
***பிழை உயிர் ஓம்புமின்***
***அறமனை காமின்.***
***அல்லவை கடிமின்***
***கள்ளை ஒழிமின்***
***களவு ஒழிமின்***
***காமம் ஒழிமின்***
***பொய் ஒழிமின்.***
***வெள்ளைக் கோட்டி ஒழிமின்***
***விரகினில் ஒழிமின்***

*எந்தவொரு சமூகமும் முரண்பாடுகள் இல்லாமல் இயங்கிட அறத்தின் ஆளுகை அடிப்படையானது. தனிமனிதரீதியில் செம்மையான வாழ்க்கை வாழ்ந்திட அறம் பின்புலமாக விளங்குகிறது. சிலப்பதிகாரப் பனுவலை வாசிக்கும்போது கண்டறிந்திடும் அறங்கள், சமூக விமர்சனமாக வெளிப்படுகின்றன. அன்றைய வைதிக சநாதனத்திற்குச் சார்பான குரலை அறம் என்ற பெயரில் காப்பியம் முன்வைத்துள்ளது. கடந்த காலத்தில் முன்னர் எப்பொழுதோ நடைபெற்ற கண்ணகி கதையாடலை முன்வைத்து இளங்கோ முன்வைத்துள்ள அறங்கள், நவீன வாழ்க்கையை விசாரணைக்குட்படுத்துகின்றன. அதுவே சிலம்பின் ஆகப் பெரிய பலம்.*

### துணைநூற்பட்டியல்

*1. சரவணன், ச. 2008. சிலப்பதிகாரம். சென்னை, சந்தியா பதிப்பகம்.*